# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## இரண்டாம் நிலை காவலர்கள் (ஆண்/பெண்), இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் (ஆண்) மற்றும் தீயணைப்போர்கள் (ஆண்) பதவிகளுக்கான பொதுத் தேர்வு 2012

## (தேர்வு குறியீட்டு எண். 1 )

## விளம்பர எண். 112

I) இந்தியக் குடியுரிமையுடைய கீழ்க்காணும் தகுதி பெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து இரண்டாம் நிலை காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் மற்றும் தீயணைப்போர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் **தமிழகத்தில் உள்ள 284 குறிப்பிட்ட தபால் நிலையங்களில்** கிடைக்கும். தபால் நிலையங்களின் விவரங்களை இக்குழுமத்தின் www.tn.gov.in/tnusrb இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

II) பதவிகளின் மொத்த எண்ணிக்கை 13320 + 56 (பின்னடைவு காலியிடங்கள் (Back log) பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய பெண்களுக்கானது)

| பதவி | பிரிவு | காலி பணியிடங்கள் | | மொத்தம் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| | | ஆண்கள் | பெண்கள் | | |
| இரண்டாம் நிலை காவலர்கள் | மாவட்ட / மாநகர சேமநலப்படை | 4284 | 1835 | 6119 | ரூ.5200-20200 + தரஊதியம் ரூ.1900 |
| | தமிழ்நாடு சிறப்பு காவல்படை | 6033 | 56 (BL) | 6033 + 56 (BL) | ரூ.5200-20200 + தரஊதியம் ரூ.1900 |
| இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் | விளையாட்டு ஒதுக்கீடு | 69 | இல்லை | 69 | ரூ.5200-20200 + தரஊதியம் ரூ.1900 |
| | | 308 | இல்லை | 308 | |
| தீயணைப்போர்கள் | | 791 | இல்லை | 791 | ரூ.5200-20200 + தரஊதியம் ரூ.1900 |
| **மொத்தம்** | | **11485** | **1835 + 56 (BL)** | **13320 + 56 (BL)** | |

III) a) 12152 இரண்டாம் நிலை காவலர்கள் தேர்வில் (56 பின்னடைவு காலியிடம் நீங்கலாக) 5% பணியிடங்கள் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் இத்தேர்வில் நேரடியாக நிரப்பப்படும்.

b) 308 இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் தேர்வில் 5% பணியிடங்கள் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் இத்தேர்வில் நேரடியாக நிரப்பப்படும்.

c) 791 தீயணைப்போர்கள் தேர்வில் விளையாட்டு வீரர்களுக்கான 5% ஒதுக்கீடு இல்லை.

IV) a) மாவட்ட / மாநகர சேமநலப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கு 5% விளையாட்டு வீரர்களின் ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்படுபவர்கள் தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் முதல் 10 ஆண்டுகள் பணியமர்த்தப்படுவார்கள்.

b) தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் அனைவரும் அப்படையில் முதல் 10 ஆண்டுகள் பணியமர்த்தப்படுவார்கள்.

V) a) இரண்டாம் நிலைக் காவலர்களின் மொத்த காலிப்பணியிடத்தில் 10% காவல்துறையை சேர்ந்த பணியிலுள்ள/ஓய்வு பெற்ற/மரணமடைந்த/மருத்துவ ரீதியாக ஓய்வுபெற்ற களப்பணியாளர்களை சார்ந்துள்ள வாரிசுகளை கொண்டும், மற்றும் இந்த 10% -ல் 10% பணியிலுள்ள /ஓய்வு பெற்ற/ மரணமடைந்த/மருத்துவ ரீதியாக ஓய்வுபெற்ற காவல்துறை அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் பிறபணியாளர்களை சார்ந்துள்ள வாரிசுகளைக் (Ward cum dependent) கொண்டும் நிரப்பப்படும்.

b) இரண்டாம் நிலை சிறைக் காவலர்களின் மொத்த காலிப் பணியிடத்தில் 10% சிறைத்துறையை சேர்ந்த பணியிலுள்ள/ஓய்வு பெற்ற/மரணமடைந்த/மருத்துவ ரீதியாக ஓய்வுபெற்ற களப்பணியாளர்களை சார்ந்துள்ள வாரிசுகளை கொண்டும், மற்றும் இந்த 10% -ல் 10% பணியிலுள்ள/ஓய்வு பெற்ற/மரணமடைந்த/ மருத்துவ ரீதியாக ஓய்வுபெற்ற சிறைத்துறை அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் பிறபணியாளர்களை சார்ந்துள்ள வாரிசுகளைக் (Ward cum dependent) கொண்டும் நிரப்பப்படும்.

c) தீயணைப்பு மற்றும் மீட்பு பணித் துறையைச் சேர்ந்த தீயணைப்போர்களின் மொத்த காலிப் பணியிடத்தில் 10% தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையைச் சேர்ந்த பணியிலுள்ள/ஓய்வு பெற்ற/மரணமடைந்த/ மருத்துவ ரீதியாக ஓய்வுபெற்ற களப்பணியாளர்களை சார்ந்துள்ள வாரிசுகளைக் கொண்டும் மற்றும் இந்த 10%-ல் 10% தீயணைப்புத்துறை அமைச்சு பணியாளர்களை சார்ந்துள்ள வாரிசுகளைக் கொண்டும் நிரப்பப்படும்.

d) சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின்கீழ் (Ward cum dependent) விண்ணப்பிக்கும் பெண் விண்ணப்பதாரர்கள், விண்ணப்பிக்கும் நாளன்று திருமணம் ஆகாதவராக இருத்தல் வேண்டும். பெண் விண்ணப்பதாரர், விண்ணப்பம் சமர்ப்பித்தபின் திருமணம் செய்துகொண்டால் அவரது விண்ணப்பம் சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின்கீழ் ஏற்றுக் கொள்ளப்படும்.

VI) a) தற்போது நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் அரசாணைகளின்படி வகுப்புவாரி இட ஒதுக்கீடு (பொது போட்டி - 31%, பிற்படுத்தப்பட்டோர் - 26.5%, பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) - 3.5%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் - 20%, ஆதிதிராவிடர் - 18% (இதில் ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கு - 3% உள்ஒதுக்கீடு அளிக்கப்படும்) மற்றும் பழங்குடியினர் - 1% வழங்கப்படும்.

b) ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கான 3% இடங்கள் முன்னுரிமையில் நிரப்பப்பட்ட பின்னர், தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் மிகுதியாக இருந்தால் அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான ஒதுக்கீட்டின் கீழும் தேர்வு செய்யப்படுவார்கள். ஆதிதிராவிடர் (அருந்ததியர்) இட ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அப்பதவியிடங்கள் ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினர் அல்லாத பிற ஆதிராவிடர் வகுப்பினரைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

VII) ஆண்களுக்கான மொத்த காலி பணியிடங்களில் 5% முன்னாள் இராணுவ வீரர்களுக்கு ஒதுக்கப்படும். முன்னாள் இராணுவ வீரர்கள் அனைவரும் அனைத்து தேர்வுகளிலும் கலந்து கொள்ள வேண்டும். இத்தேர்வுகளில் இவர்களுக்கு எவ்வித விதிவிலக்கும் இல்லை.

VIII) a) இத்தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்கள் பத்தாம் வகுப்பு கல்வியை தமிழ் வழியில் பயின்றிருப்பின், அவர்களுக்கு இறுதித் தேர்வின் போது (Final Selection) வகுப்பு வாரியாக, 20% ஒதுக்கீடு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

b) விண்ணப்பதாரரின் மதிப்பெண் / மாற்றுச் சான்றிதழில் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை அவர் தமிழ் பயிற்று மொழியில் (Tamil Medium) பயின்றுள்ளார் என்ற விவரம் இல்லாதிருந்தால், அவர் பயின்ற கல்வி நிலையத்திலிருந்து அவர் பத்தாம் வகுப்பு கல்வியை தமிழ் பயிற்று மொழியில் படித்துள்ளார் என்பதற்கான சான்றிதழை பெற்று விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு உரிய சான்றிதழ் இணைத்து அனுப்பாத விண்ணப்பதாரர்கள் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள். (மாதிரி சான்றிதழ் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது).

IX) பெண்களுக்குக்கான காலி பணியிடங்களில் 10% ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படும். ஆதரவற்ற விதவைகள் பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அப்பதவியிடங்கள் அந்தந்த வகுப்பிற்குரிய பெண் விண்ணப்பதாரர்களை கொண்டு நிரப்பப்படும். ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழை வருவாய் கோட்டாட்சியர் (RDO) / துணை ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படவேண்டும்.

X) இத்தேர்வில் பிறபதவிகளுக்கு தேர்வுபெற விரும்பும் தமிழ்நாடு சிறப்பு காவல்படையில் இரண்டாம் நிலை காவலராக, சிறைத்துறையில் சிறைக் காவலராக மற்றும் தீயணைப்புத்துறையில் தீயணைப்போராக பணிபுரிபவர்கள் தகுதியான வயது இருக்கும் பட்சத்தில் தாங்கள் பணிபுரியும் அலுவலக தலைவரிடமிருந்து தடையில்லா சான்று பெற்று இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள் இப்பொதுத் தேர்வுக்கு

மூன்றுமுறை மட்டுமே விண்ணப்பிக்கலாம். தடையில்லா சான்றில் விண்ணப்பதாரர் பணியில் இருந்து கொண்டு எத்தனை முறை விண்ணப்பித்து இருக்கிறார் என்ற விவரம் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கவேண்டும். இத்தேர்வில் இவர்கள் தேர்ச்சி பெற்றால் புதிய பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும். ஏற்கனவே பணிபுரிந்த அலுவலகத்தில் மீள்உரிமை, பணியிலிருந்து விடுவிக்கப்படும் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்கு உள்ளது. பழைய பதவியிடத்தில் அனுபவித்த / நிலுவையில் உள்ள விடுப்புகள் புதிய பணியிடத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

XI) இவ்விண்ணப்பதாரர் புதிய துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், புதிய துறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு அனைத்து பயிற்சிகளுக்கும் உட்படுத்தப்படுவார்கள். ஒருவர் தமிழ்நாடு சிறப்பு காவல் படையிலிருந்து சேமநல படைக்கோ அல்லது சேமநல படையிலிருந்து தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கோ தேர்வு பெறும் பட்சத்தில் அவர் புதிய பதவியிடத்தில் பயிற்சி பெறத் தேவையில்லை. எனினும், புதிய துறை பயிற்சியில் மாற்றம் தேவையென தீர்மானிக்கும் பட்சத்தில் அவர் புதிய பதவிக்கான பயிற்சி பெற வேண்டும்.

XII) புதிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தமது பழைய பதவியிடத்தில் பயிற்சியினை முழுமையாக நிறைவு செய்யவில்லையெனில் அவர்கள் புதிய பதவியிடத்தில் முழுமையான பயிற்சிக்கு உட்படுத்தப்படுவார்கள்.

XIII) **முதுநிலை:**

a) பயிற்சி காவலர்களுக்கு, காவல் பயிற்சி பள்ளியில் நடத்தப்படும் இறுதி தேர்வில் பெறும் மதிப்பெண்கள் மற்றும் புதிய பணியிடத்தில் பணியமர்த்தப்படும் நாள் ஆகியவற்றின் அடிப்படையில் முதுநிலை நிர்ணயம் செய்யப்படும்.

b) தமிழ்நாடு சிறப்பு காவல் படையிலிருந்து சேமநல படைக்கோ அல்லது சேமநல படையிலிருந்து தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கோ தேர்வு பெற்று பயிற்சி பெறுவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டால் இவர்களது முதுநிலை இவர்கள் பழைய காவலர் பயிற்சி பள்ளியில் நடத்தப்பட்ட இறுதி தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மற்றும் பழைய பதவியிடத்தில் பணியமர்த்தப்பட்ட நாளின் அடிப்படையிலும் இத்தேர்வில் கலந்து கொள்ளும் பொது விண்ணப்பதாரர்களின் முதுநிலைக்கு மேலே முதுநிலையில் வைக்கப்படுவார்கள்.

c) விண்ணப்பதாரர் சிறைக்காவலர் மற்றும் தீயணைப்போர் துறையிலிருந்து தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கோ அல்லது சேமநல படைக்கோ தேர்வு செய்யப்படும் பட்சத்தில் இவர்கள் பயிற்சி நிலையத்தில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் பொது விண்ணப்பதாரர்களுடன் முதுநிலையில் வைக்கப்படுவர்.

XIV) **பதவி முன்னுரிமை (Post Preference)**

**இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் தாங்கள் விரும்பும் பதவிக்கான (AR/TSP/Jailwarder/Fireman) விருப்பத்தினை முன்னுரிமைப்படி வரிசைகிரமமாக OMR விண்ணப்பப்படிவத்தில் வரிசை எண். 15-ல் தவறாமல் பூர்த்தி செய்யவேண்டும். விண்ணப்பதாரர் OMR விண்ணப்பப்படிவத்தில் தான் விரும்பும் பதவிக்கு கொடுத்துள்ள முன்னுரிமை மற்றும் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார். விண்ணப்பதாரர்கள் பிற பதவிக்கான மதிப்பெண் பெற்றிருந்தாலும் முன்னுரிமை கோரிய பதவிக்கே தேர்வு செய்யப்படுவார்கள். பின்னர் கோரும் எந்தவிதமான பதவி மாற்ற வேண்டுதல், எக்காரணத்தை முன்னிட்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

XV) **விண்ணப்பதாரர்களுக்கான வயது தகுதி**

1) 01.07.2012 அன்று 18 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும். (01.07.1994 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும்)

2) 24 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். (01.07.1988 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்).

3) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள் 01.07.2012 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01.07.1986 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்)

4) ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள் 01.07.2012 அன்று 18 வயது நிறைவு

பெற்றவராகவும் 29 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1983 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்).

5) (i) முன்னாள் இராணுவத்தினர் 01.07.2012 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01.07.1967 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்),
(ii) முன்னாள் இராணுவத்தினர் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதியில் இருந்து மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6) ஆதரவற்ற விதவைகள் எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் 01.07.2012 அன்று 18 வயது நிறைவு அடைந்தவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1977 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்)

7) கல்வித் தகுதி புதிய பாடத்திட்டத்தின் படி 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

XVI) **உடல் அளவுகள்**

ஆண்கள் 1) உயரம் குறைந்த அளவு 170 செ.மீ இருக்க வேண்டும். ஆதி திராவிடர் /பழங்குடியினர் உயரம் குறைந்த அளவு 167 செ.மீ இருக்க வேண்டும்.
2) மார்பளவு அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் குறைந்தபட்சம் 81 செ.மீ இருக்க வேண்டும். மூச்சடக்கிய நிலையில் குறைந்தபட்சம் 5 செ.மீ. மார்பு விரிவாக்கம் (Expansion) இருக்க வேண்டும்.

பெண்கள் உயரம் குறைந்தபட்சம் 159 செ.மீ இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குறைந்த பட்சம் 157 செ.மீ இருக்க வேண்டும்.

XVII) விளையாட்டுக்கான 5% ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் (ஆண்/பெண்) பொது விண்ணப்பதாரர்களைப் போலவே எழுத்துத் தேர்வு மற்றும் அதனை தொடர்ந்து பிற போட்டிகளிலும் கலந்து கொள்ள வேண்டும். அத்துடன் கீழ்காணும் 14 அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது அதற்கு மேற்பட்ட விளையாட்டுகளிலோ பங்கேற்றதற்கான படிவம் I, படிவம் II அல்லது படிவம் III-ஐ பெற்றிருக்க வேண்டும். இக்குழும அறிவிக்கை வெளிவந்த நாளுக்கு முன்னர் 5 ஆண்டுகளுக்குள் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு படிவம் I, படிவம் II அல்லது படிவம் III-ஐ பெற்றவர்கள் மட்டும் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலனை செய்யப்படுவார்கள்.

***அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகள்***

1. கூடைப்பந்து 2. கால்பந்து 3. ஹாக்கி 4. கையுந்துபந்து 5. கைபந்து 6. கபடி 7. மல்யுத்தம் 8. குத்துச் சண்டை 9. ஜிம்னாஸ்டிக்ஸ் 10. ஜூடோ 11. பளு தூக்குதல் 12. நீச்சல் போட்டி 13. தடகள போட்டிகள் 14. குதிரையேற்றம்.

XVIII) சார்ந்துள்ள வாரிசுக்கான (Ward cum dependent) ஒதுக்கீட்டின் கீழ் a) மகன் b) திருமணமாகாத மகள் c) சட்டப்படி தத்தெடுக்கப்பட்ட மகன் d) சட்டப்படி தத்தெடுக்கப்பட்ட திருமணமாகாத மகள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே இவ்வொதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

XIX) தேர்வு செய்யப்பட்ட அஞ்சல் நிலையங்களில் ரூ.30 /- ஐ செலுத்தி OMR விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம். OMR விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

XX) விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணம் ரூ. 135 /-ஐ அஞ்சலகத்தில் செலுத்தி, அதற்கான இரசீதைப் பெற்று, பூர்த்தி செய்த OMR விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

XXI) விண்ணப்பங்கள், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடைசி தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இக்குழும அலுவலகத்தை வந்தடைய வேண்டும். குறிப்பிடப்பட்ட தேதிக்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

XXII) எழுத்துத் தேர்விற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 80 மதிப்பெண்களில்

a) **பகுதி - அ** பொது அறிவு (General Knowledge) - 50 மதிப்பெண்கள் (கொள்குறி வகை (Objective Type Question))

b) **பகுதி - ஆ** உளவியல் (Psychology) - 30 மதிப்பெண்கள் (கொள்குறி வகை (Objective Type Question)) என்று பிரிக்கப்படும். எழுத்து தேர்வில் குறைந்தபட்சம் 28 மதிப்பெண்கள் விண்ணப்பதாரர்கள் பெற வேண்டும்.

c) எழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் மொத்த காலியிட எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வகுப்பு வாரி விகிதாச்சாரப்படி 5 மடங்கு விண்ணப்பதாரர்கள் மட்டும் அடுத்தக்கட்ட தேர்வான அசல் சான்றிதழ்களைச் சரிபார்த்தல், உடல் கூறு அளத்தல். உடல் தகுதித் தேர்வு மற்றும் உடல் திறன் போட்டிகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

d) ஆண் விண்ணப்பதாரர்களில் 1500 மீட்டர் ஓட்டத்தினை 7 (ஏழு) நிமிடங்களில் முடித்தவர்கள் மட்டுமே உடல் திறன் (Physical Efficiency Test) போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

e) பெண் விண்ணப்பதாரர்களில் 400 மீட்டர் ஓட்டத்தினை 2 (இரண்டு) நிமிடங்களில் முடித்தவர்கள் மட்டுமே உடல் திறன் (Physical Efficiency Test) போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

f) உடல் திறன் போட்டிகளில் ஆண்களுக்கு கயிறு ஏறுதல், நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல், 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம், பெண்களுக்கு நீளம் தாண்டுதல், கிரிக்கெட் பந்து எறிதல் (அல்லது) குண்டு எறிதல், 100 மீட்டர் (அல்லது) 200 மீட்டர் ஓட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படும்.

XXIII) எழுத்துத் தேர்வு, உடல் திறன் போட்டி மற்றும் சிறப்பு மதிப்பெண் ஆகியவற்றில் பெறும் மொத்த உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் விண்ணப்பதாரர் தெரிவித்துள்ள பதவி விருப்ப முன்னுரிமைப்படியும் காலியிடங்களுக்கு ஏற்ப வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி மாவட்ட / மாநகர சேமநலப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை, இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்போர் பதவிக்கு முறையே தேர்வு செய்யப்பட்டு பின்னர் மருத்துவத் தேர்வு மற்றும் காவல் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்.

XXIV) இத்தேர்விற்கான மதிப்பெண்கள் விவரம் : மொத்த மதிப்பெண்கள் = 100 (1) எழுத்துத் தேர்வு = 80 மதிப்பெண்கள் (2) உடல் திறன் போட்டி = 15 மதிப்பெண்கள் (3) NCC, NSS, விளையாட்டுச் சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் = 5. விண்ணப்பதாரர்கள் பிற தகுதிகள் அனைத்தும் சம அளவு பெற்று இருக்கும் பட்சத்தில் அவர்களுள் எவர் ஒருவர் சாரணர் இயக்கத்தில் பங்கு பெற்று மேதகு இந்திய குடியரசு தலைவரின் சான்றிதழை பெற்றுள்ளாரோ அவருக்கு, பதவி வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

XXV) இத்தேர்வுக்குரிய அனைத்து தேவையான விவரங்களையும் விண்ணப்பத்துடன் கிடைக்கும் தகவல் சிற்றேட்டை படித்து தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்பு தகவல் சிற்றேட்டினை கவனமாக படித்து அதில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி பூர்த்தி செய்ய வேண்டும்.

XXVI) இந்த விளம்பரமும் மற்ற விபரங்களும் இக்குழுமத்தின் www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

XXVII) **முக்கிய தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1) | தபால் நிலையங்களில் விண்ணப்பங்கள் கிடைக்கும் நாள் | 21.03.2012 | காலை 10.00 மணி |
| 2) | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இக்குழுமத்திற்கு வந்து சேர வேண்டிய **கடைசி நாள்** | 23.04.2012 | மாலை 05.45 மணி |
| 3) | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | 24.06.2012 | காலை 09.00 மணி |

இத்தேர்வு பற்றிய முழுவிவரங்கள் மற்றும் தகவல்கள் தகவல் சிற்றேட்டில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,**
**சென்னை - 2.**